அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

அருணகிரிநாதரின் அவிநாசி திருத்தலத் திருப்புகழ் காட்டும் பக்தி நெறி

Arunagirinatharin Avinashi Thiruthala Thirupugazh Katum Bakthi Neri

த. பாலகிருஷ்ணன், பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், 20PTAP01, தமிழ் துறை, பதிவு எண் : 21309/B5/2020(01.01.2021) , பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி). பாரதியார் பல்கலைக்கழகம் இணைவு, கோயம்புத்தூர்

Balakrishnan.T *, Part-Time Ph.D. Research Scholar, 20PTAP01, Department of Tamil, Registration No.: 21309/B5/2020 (01.01.2021), P.S.G. College of Arts & Science (Autonomous) Affiliated to Bharathiar University,Coimbatore — 641014,*

நெறியாளர்: முனைவர் வே.விக்னேசு தமிழ் உதவிப்பேராசிரியர், பூ.சா. கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் 641014.

Dr.V.Vignesh, Assistant professor, P S G college of Arts and Science, Coimbatore-641014

Abstract:

The forms of worship that emerged to fulfil the social and psychological needs of human beings gradually evolved into the path of devotion (Bhakti) and later developed into the Bhakti movement. During this period, devotees, saints, Alvars, and Nayanmars expressed their thoughts, experiences, and spiritual insights through devotional literature in the language style of their time. These works imparted both devotional values and ethical principles essential for human life. This paper examines the values of life, the path of devotion, and the significance of liberation (Moksha) presented in the Tiruppugazh hymns composed by Arunagirinathar at the sacred shrine of Avinashi (Tiruppukkoliyur). Blessed by the grace of Lord Arumuga (Murugan), saint Arunagirinathar visited many sacred shrines and sang hymns in praise of the Lord. The study focuses on how the Avinashi Tiruppugazh hymns convey spiritual values, devotional ideals, and the path to liberation.

Keywords: *Arunagirinathar, Tiruppugazh, Lord Murugan, Avinashi (Tiruppukkoliyur), Sundarar, Avinashi Appar (Avinashilingeswarar), Perungarunaithayar (Goddess Karunambikai).*

ஆய்வுச்சுருக்கம்:

மனிதர்களின் வாழ்வியல், உளவியல் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக தோன்றிய வழிபாட்டு முறைகள் பக்தி நெறியாக வளர்ந்து பக்தி மார்க்கம் என மலர்ந்து பக்தி இயக்கமாக பரிணமித்து இயங்கியது. இத்தகைய பக்தி இயக்கத்தில் பயணித்த அடியார்களும், அருளாளர்களும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் என பலரும் தமது எண்ணங்களை, சிந்தனைகளை, அனுபவங்களை அப்போது வழக்கத்தில் இருந்த மொழிநடையில் பக்தி இலக்கியங்களாக படைத்தனர். அத்தகைய படைப்புகள் மானுட சமூகத்திற்குத் தேவையான பக்தி, வாழ்வியல் நெறிகளை ஒருங்கே வழங்கியது. இவ்வாறு மொழியும், மானிட வாழ்வும் வளர்ந்து சிறப்படைந்தது. மனிதன் தன் தவறை உணர்ந்து இறைவனை வேண்டினால், அவரது பக்தி உண்மையாக உள்ளன்போடு இருந்தால் இறைவன் அருள் தந்து ஆட்கொள்வார் என்பதற்கு பல சான்றுகளை வழங்கியது. அவ்வகையில், ஆறுமுக கடவுளின் அருளை பெற்ற அருணகிரிநாதர் இறையருள் கருணையினால் அழைக்கப்பெற்று பல திருத்தலங்களுக்கு சென்று பாடிப் பரவிய திருப்புகழ் பாடல்களில், அவிநாசி (திருப்புக்கொளியூர்) திருத்தலத்தில் பாடிய திருப்புகழ் பாடல்கள் கூறும் வாழ்வியல், பக்தி நெறிகளை, முக்தி சிறப்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்: அருணகிரிநாதர், திருப்புகழ், முருகப்பெருமான், அவினாசி (திருப்புக்கொளியூர்) சுந்தரர், அவிநாசி அப்பர், பெருங் கருணைத்தாயார்.

முன்னுரை

உலகம் உய்வு பெற உதித்த அருளாளர்களும், அருவமும் உருவமும் ஆகி அனாதியாய், பலவாய், ஒன்றாய் தோன்றிய இறையாற்றலும் பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டு உயிர்கள் உன்னத நிலையை அடைய வழிகாட்டி உதவி இருக்கின்றன. அவ்வகையில் அருணகிரிநாதர் பல திருத்தலங்களுக்குத் தல யாத்திரைகள் சென்று அத்திருத்தல இறைவனைத் தரிசித்துப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பரவிய திருப்புகழ் பாடல்கள், உயிர்களுக்கான பக்தி நெறிகளையும், வாழ்வியல் நெறிகளையும் ஒருசேர வழங்கியது. அவ்வரிசையில் உருவான அவிநாசி திருப்புக்கொளியூர் திருத்தலத் திருப்புகழ் காட்டும் பக்தி நெறியின் சிறப்பை ஆராய்ந்து வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கொங்கு நாட்டுத் திருப்புகழ் தலங்கள்

ஆறுமுக கடவுளின் கருணையினால் ஆட்கொள்ளப்பட்டு, அருளை பெற்ற அருணகிரிநாதர் பல திருத்தலங்களுக்குத் தல யாத்திரை மேற்கொண்டு 16,000க்கும் மேற்பட்ட திருப்புகழ் பாடல்களைப் பாடி இறைவனைப் போற்றித் தொழுதார், இவற்றுள் நேரடியாகப்

பாடல் பெற்ற திருப்புகழ் தலங்கள் 206 மட்டுமே, அதில் 105 தலங்கள் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஆகும். பல கொங்கு நாட்டுத் திருத்தலங்களில் தற்போதைய திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கொங்கேழ் திருத்தலங்களில் முதன்மையானதும், ஆறு திருப்புகழ் பாடல்கள் பெற்ற திருப்புக்கொளியூர் (அவிநாசி) தேவாரத் திருத்தலம் ஆகும். திருமுருகன்பூண்டி, கொங்கணகிரி, பட்டாலியூர், (சிவன்மலை) சிங்கை (காங்கேயம்), ஊதிமலை, கன்னபுரம் திருத்தலங்கள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பிற திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலங்கள் ஆகும். ஈரோடு மாவட்டத்தில் பவானி, கொடுமுடி, சென்னிமலை, விஜயமங்கலம், மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, கொல்லிமலை, ராஜபுரம் (ராசிபுரம்) அலையாமலை (அளவாய் மலை), கரூர் மாவட்டத்தில் வெஞ்சமாங்கூடல், கருவூர்(கரூர்), நெருவூர்(நெரூர்) புகழிமலை, கோவை மாவட்டத்தில் குருடிமலை, மருதமலை, பேரூர், தென்சேரிகிரி (செஞ்சேரிமலை),திண்டுக்கல் மாவட்டத்தில் பூம்பாறை, திருஆவினன்குடி, (பழனி) திருத்தலங்களும், சேலம், தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தீர்த்தமலை போன்ற திருத்தலமும் கொங்கு நாட்டுத் திருப்புகழ் பாடல் பெற்ற தலங்கள் ஆகும்.

அவிநாசி திருப்புக்கொளியூர் திருத்தல வரலாறும் வழிபாடும்

கொங்கேழ் திருத்தலங்களில் முதல் திருத்தலமும், முதலை உண்ட மழலையை மீட்டுத் தந்தருளிய அருட்தலமான அவிநாசி திருப்புக்கொளியூர் திருத்தலத்தின் வரலாறு மிகத் தொன்மையும், பெருமையும் வாய்ந்தது.சிவபெருமான் ஊழிக்காலத்தே சங்கார தாண்டவத்தை செய்தருளிய காலத்திலே அதனைக்கண்டு அஞ்சி பிரம்மா, விஷ்ணு என முப்பத்து முக்கோடி தேவர்கள் யாவரும் தம்மிடத்தில் "புக்கு ஒளித்த தானம்" இதுவாம் என்று இறைவனே கூறியமையால் ‘‘திருப்புக்கொளியூர்’’ என்று இத்திருத்தலம் சிறப்புப் பெயரைப் பெற்றது என இத்தலபுராணம் கூறுகின்றது.

"அற்புதக் கூத்தாகிய ஞானமா நடனத்தை செய்து, பரமானந்தத்தை விளைவிப்பதாகிய ஆற்றல், அனுபவ நிலையுடன், அவ்விஷயம் நீங்காத தன்மையுடனே விளங்கி, எக்காலத்தும், எக்காரணத்தும் அழிவு நேராமல், குற்றமில்லாத சிவானுபூதியையும், சிவநீதியும் பொருந்தும் திருத்தலம் இது" என இத்தலபுராணம் கூறுகின்றது. (விநாசம் - அழிவு) அ+விநாசம் - அழிவற்றது என்னும் பொருளில் அவிநாசி என்னும் பெயரில் விளங்கும் திருத்தலம். இங்குள்ள இறைவன் அவிநாசியப்பர், இறைவி பெருங்கருணைத் தாயார்.

அவிநாசி திருத்தல திருப்புகழ்

வீடுபெற

‘‘இறவாமற் பிறவாமல் எனையாள்சற் ...... குருவாகிப்

பிறவாகித் திரமான பெருவாழ்வைத் ...... தருவாயே

குறமாதைப் புணர்வோனே குகனேசொற் ...... குமரேசா

அறநாளைப் புகல்வோனே அவிநாசிப் ...... பெருமாளே!"

(தித்திக்கும் திருப்புகழ் அமுதம் -சே சொ மீ சுந்தரம் உமா பதிகம் 2019- பாடல் எண்- 98)

அருணகிரிநாதர் மிகச் சுருக்கமாக, அதே நேரத்தில் ஆழமான வாழ்க்கை உண்மைகளை உணர்த்தக்கூடிய தத்துவங்களை உள்ளடக்கிய இந்த இறவாமற் பிறவாமல் திருப்புகழ் பாடல் மூலம் உலக உயிர்கள் தங்கள் செய்த முந்தைய கர்ம வினைகளுக்கு ஏற்ப மீண்டும் மீண்டும் பிறவி சுழற்சியில் சிக்கி தவிப்பதில் இருந்து விடுபட்டு நிலையான பேரின்ப முக்தி வாழ்வை அருள வேண்டும் என முருகப் பெருமானை, ஒரு சற்குருவை வேண்டி நிற்பதை போல வேண்டுகிறார்.உயிர்களின் கர்ம வினைகளால் நிகழும் ஒரு முடிவற்ற பிறப்பு-இறப்புச் சுழற்சியை உடைப்பதற்காக, உயிர்களின் முயற்சி தாண்டி அந்த பரம்பொருளின் திருவருளும், கருணையும், குருவின் வழிகாட்டலும் இருந்தால் தான் இது சாத்தியம் என உணர்ந்து, எமது ஆன்மாவை உடல் ரீதியாக,ஆன்மீக ரீதியாக ஆட்கொண்டு அருள உண்மையான குருவாக(சற்குரு) தன்னிடம் வருமாறு அருணகிரிநாதர் முருகப்பெருமானிடம் வேண்டுகிறார். இந்த தற்காலிகமான, நிலையற்ற உலக வாழ்க்கைக்குப் பதிலாக, நிரந்தரமானதும், அழியாததுமான மோட்சம் என்னும் முக்தி பெருவாழ்வு நிலையை வேண்டுகிறார். தித்திக்கும் திருப்புகழ் அமுதம் நூல் மூலம் ஆசிரியர் சே சொ மீ சுந்தரம் அவர்கள், பழங்குடிகுறப் பெண் வள்ளியின் கருணையுள்ளகாதலராகவும், உயிர்களின் உள்ளக் குகையில் ஒளியாக (குகன்)உள்ளுறைவாசியாகவும், மாசற்ற இளமையும் அழகும் மாறாத இறைவன்(குமரேசன்), வேதங்களாலும், சான்றோர்களாலும் சிறந்த சொற்களாலும், குகனே! குமரேசனே! எனப் போற்றிப் புகழப்படுபவன்,வாழ்க்கையின் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட் தத்துவங்களையும், நான்கு வேதங்களின் சாரத்தையும் தன் அடியார்களுக்கு எடுத்துரைக்கும் மாபெரும் ஞானகுருவான முருகப்பெருமானை தனக்கும், உயிர்களுக்கும் உபதேசிக்க வேண்டி அழிவற்ற நகரமான அவிநாசியின் அதிபதியான இறைவனிடம் இந்த மகத்தான வேண்டுதலை சமர்ப்பிப்பதாகக் கூறுகிறார்.

திருவடியைமறவேன்-

"பந்தப் பொற்பாரபயோ தர முந்திச்சிற் றாடகை

மேகலை பண்புற்றுத் தாளொடு மேவிய ......"

(திருப்புகழ் மூலமும் உரையும் ஆசிரியர் வா.சு செங்கல்வராயன் பிள்ளை-உமா பதிப்பகம்-பாடல் எண்-948)

என்னும் திருப்புகழ் பாடலில் அழகிய கூரிய வேலாயுதத்தை ஏவிய பெருமாளே! கொங்கு நாட்டில் உள்ள அவிநாசி என்னும் ஊரில் வீற்றிருக்கும் முருகப்பெருமானே! கனத்த மார்பகம், சிறிய இடை அணி (மேகலை), பாதம் வரை தொங்கும் ஆடை அணிந்த வேசியர்களின், பனிநீர் கலந்த மாலைகளையும், சிவப்புத் தாமரை போன்ற வாயையும் உடைய, பூக்கள் சூடிய பெண்களின் கூடலை, பிரிவை எண்ணி மூழ்கி, உண்மையில் அறிவுடையவனோ? அல்லது, அத்தகைய பெண்களின் பிரிவைச் சந்திக்க முடியாமல் கஷ்டப்படும் சிறியவனோ? அவிநாசிப் பெருமானே! கொங்கில் தொக்கு ஆர் அவிநாசியில் தண்டைச் சிங்கார அயில் வேல் விடு பெருமானே! என சிற்றின்ப மயக்கத்தால் வரும் துன்பங்களை விவரித்து, வேசியர்களின் போலி அன்பால் விளையும் ஆபத்துக்களை உணர்த்தி, அத்தகைய சிற்றின்ப சண்டாளர்களின் வலையில் சிக்கி நோய் பிணிக்கு ஆளாகி வருந்தும் நிலை வேண்டாம் என இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் தேவர்களாளும், தேவ தவசிகளாளும் துதிக்கப்படும் முருகப்பெருமானே! எனக்கு இந்த சிற்றின்பம் மயக்கத்தில் இருந்து விடுபட்டு உனது திருவடிகளை அடையும் ஞானத்தை தந்தருள உள்ளம்உருகி வேண்டுகிறார் என திருப்புகழ் மூலமும் உரையும் ஆசிரியர் வா.சு செங்கல்வராயன் பிள்ளை அவர்கள் கூறுகிறார் .

இத்திருப்புகழில் அருணகிரிநாதர், விலைமாதர்களின் போலி அன்பிலும் உலகியல் மாயைகளிலும் தான் சிக்கித் தவித்தாலும், தேவர்கள்போற்றும் முருகப் பெருமானின் திருவடிகளைத் தனது மனம் ஒரு போதும் மறக்கக்கூடாது என்றுஉறுதியான பக்தியை வேண்டுக்கிறார். திருமால் மற்றும் பிரம்மனால் போற்றப்படுபவனும், திருஞானசம்பந்தராக அவதரித்துத் தமிழ் வளர்த்தவனும், கொடிய அசுரர்களை அழித்துத் தேவர்களை அமராவதியில் குடியேறச் செய்தவனான முருகனின் வீரத்தைப் புகழ்கிறார். இத்தகைய பெருமைகள் வாய்ந்த முருகன், கொங்கு

நாட்டின் அவினாசித்தலத்தில் வீற்றிருந்து அருள்பாலிப்பதாகப் புகழ்ந்து பாடி மகிழ்கிறார்.

யமபயம்அறவரவேணும்-

மனத்தி ரைந்தெழு மீளையு மேலிட

கறுத்த குஞ்சியு மேநரை யாயிட

மலர்க்க நண்டிரு ளாகியு மேநடை ......”

(முருகவேள் பன்னிரு திருமுறை-வா.சு செங்கல்வராயன் பிள்ளை- தொகுதி-2, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் : 1992)

மனம் சுருங்கி,வேதனைப்படும்படி எழுகின்ற கோழையும் அதிகரிக்கவும், கரு நிறமுள்ள தலை மயிர்நரைக் கொண்டு வெளுக்கவும்,தாமரை போன்ற கண்கள் பஞ்சடைந்து , நடையும், மனவுறுதியும் குறையவும், தாயார், மனைவி, மக்கள், நல்ல சுற்றத்தார் என அவருடன் மற்றெல்லாரும், வெறுப்புக் கொள்ளும்படியும், பழிக்கும் படியான சொற்களைச் சொல்லி, நாள் தோறும் பரிகசித்துச் சிரிப்பதால்,வேதனைப்படும் என்னை அடைந்து, சூலத்தைக் கையில் எடுத்து, நெருப்பை வாய் கக்க, பயம் கொள்ளும்படி பாசமுமே அதனைஎன் மேல் வீசி, (என்னை) இழுக்க வந்திடும் யம தூதர்கள் என்னைப் பிடிப்பதற்கு முன்பாக, உன்னுடைய தாமரையாகிய இணைப்பதம் தரவே மயில் மீதினில் வரவேணும்! செறிந்த செந்தமிழால் உன்னையே தினந்தோறும் நினைக்கவும் உன்னுடைய நிறைந்த திருவருளைத் தந்தருளுக!.என்றும், என்னுடைய அருமையான உயிர்க்குத் துணையாக (என்) கருத்திலேயே பொருந்தி, வீற்றிருந்து அருள் தருவாய் அவிநாசியில் வீற்றிருக்கும் முருகப்பெருமானே! உன்னைச் சரணடைகிறேன், வீரத்தனையாக என்னுள் கலந்திருந்து அருள்புரிவீர் என வேண்டுவதாக முருகவேள் பன்னிரு திருமுறை ஆசிரியர் வா.சு செங்கல்வராயன் பிள்ளை அவர்கள் கூறுகிறார் .

இத்திருப்புகழ் பாடலில் வயோதிகத்திலோ அல்லது நோயின்பிடியிலோ சிக்கும்போது, உற்றார்உறவினர்கள் அனைவரும் வசைபாடி, வெறுத்து ஒதுக்குவார்கள் என்ற உலகியல் உண்மையை உரைக்கிறார்.பாசக் கயிற்றோடும்நெருப்போடும் வரும் கொடிய எமதூதர்கள் தன் உயிரைப் பறிக்கவரும் முன்பாகவே, மயில் மீது வந்துதன் திருவடி நிழலைத் தந்து காக்கவேண்டும் என்றுமுருகனிடம்வேண்டுகிறார். செந்தமிழால் என்றும்பாடும் வரத்தைக் கேட்கிறார்.

கடல் நீரில் (மாமரமாக) ஒளித்திருந்த சூரனுடையஉடலைப் பிளவு செய்ய அது இரண்டு கூறாகத் தோன்றி எழுந்து,ஒப்பற்ற சேவலும்,மயிலும் தோன்றும் படிசெலுத்திய வேலை உடையவனே! என வேலவனின் வீரத்தையும், திருமால்-பிரம்மனால்காண முடியாத சிவபெருமானுக்கே பிரணவப் பொருள் உரைத்த அவனது ஞானத்தையும் போற்றுகிறார். அற நெறியைஓதுவோர்களும், பெருமை பொருந்திய அந்தணர்களும், நினைத் தினம் தொழும் அடியார்க்குஅருள்நிறையப் பாலித்து, அவிநாசி எனும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! தமக்கு உறுதுணையாக வர வேண்டும் எனப் பாடிப் பணிந்து வேண்டுகிறார்.

திருப்புக்கொளியூர்

திருவடியைமறவேன்-

பக்குவ வாசார லட்சண சாகாதி
பட்சண மாமோன ...... சிவயோகர்
பத்தியி லாறாறு மேல்வீடு தத்துவ

பற்றுநி ராதாரா ...... "

(திருப்புகழ் மூலமும் உரையும்- ஆசிரியர் வா.சுசெங்கல்வராயன் பிள்ளை-உமா பதிப்பகம்-பாடல் எண்-950)

அவிநாசி (திருப்புக்கொளியூர்) தலத்தின் மீது பாடப்பட்ட இத்திருப்புகழில், அருணகிரிநாதர் உண்மையான சிவயோகிகளின் தூயவாழ்க்கை முறையையும்,

மனம்பக்குவம் அடைந்து,பக்குவமான ஆசார ஒழுக்க நிலையிலே நின்று, சிறப்பானபச் சிலை, மூலிகைகள் போன்ற உணவையே உண்டு, மௌனத் தவநிலையில் நிற்கும் சிவயோகிகள் தங்களது பக்தி மூலமாக ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டதாய் உள்ள மோட்ச வீட்டைப் பற்றுவதானதும், நிராதார நிலையாக எந்தவிதமான பற்றும் இல்லாத நிலையை நான் அடைவதற்காகவும், அந்நிலையை நான் அடைந்ததுமே, மாயமாக வந்து என்னைப் பற்றியுள்ளதுர்க் குணங்கள் யாவும் என்னை விட்டுப் பிரியவும், அந்த ஞான உபதேசமே என்னைக் காக்கும் ஆயுதமாக மாறி, பாசம்யாவும் அற்றுப்போகும்படி உபதேசமந்திரத்தை வாய்விட்டுக் கூறிய சற்குருநாதனே!, என வேண்டுவதாக திருப்புகழ் மூலமும் உரையும் ஆசிரியர் வா.சு செங்கல்வராயன் பிள்ளை அவர்கள் கூறுகிறார் .

உனது அற்புதமான அழகிய திருவடிகளை நான் என்றும் மறவேன். வலிமைமிக்க பன்னிருதோள்களை, உண்மைக்கு எடுத்துக்காட்டான புயங்களை உடையவனே, நீலோத் பல மலர்க் கூட்டங்களின் நறுமணம் மிகவும் வீசுவதும், பொருந்திய நிலாவின் ஒளி வீசுவதும், முத்தைப்போல் தெளிவான நீருள்ள குளங்களில் குவளைகளும், தாமரைகளும் பூத்திருக்கும் வயலூரின் நாதனே, பொய்யே இல்லாத மெய்யான வீரத்தைக் கொண்டவனே, அழகிய மேனி பொன்னொளியை வீசும் தேகத்தை உடையவனே, கலியுகத்தின் பொய்களையும், துன்பங்களையும் போக்கி

அவிநாசி என்ற தலத்தில் இந்தக் கலியுகத்தின் பொய்மை நீங்குமாறு மெய்யருள் புரிவதற்காகவே இறைவன் திருவருளின் புகழ் சிறக்கும் படிச் செய்த திருப்புக்கொளியூர் தலத்தில் வீற்றிருக்கும்பெருமாளே!. என முருகன் தமக்கு அருளிய ஞான உபதேசத்தை நினைத்து அந்தச் சத்குருநாதனின் திருவடிகளை மறவாமல் பற்றுகிறேன் எனப் பாடி பரவுகிறார்.

துதி-

"மதப்பட்டவி சாலக போலமுமுகப்பிற்சன வாடையு

மோடையுமருக்கற்புர லேபல லாடமு — மஞ்சையாரி வயிற்றுக்கிடு"

(அருணகிரிநாதர் திருப்புகழ் — பாகம் 5 (இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு) -2021)

"மதப்பட்ட விசால" என்று தொடங்கும் இத்திருப்புகழில் அருணகிரிநாதர் இருவேறு பரிமாணங்களை அழகாக இணைக்கிறார். முதலில், இந்திரனின் கம்பீரமான வெள்ளை யானை, கற்பக மரத்தின் நிழல், மற்றும் தேவர் உலகின் சிறப்புக்களை விவரித்து, இவற்றுகெல்லாம் மாபெரும்தலைவனாக விளங்கி வயலூரில் தன்னை ஆட்சொண்ட முருகப் பெருமானைப் போற்றுகிறார்.அடுத்து, சுந்தரமூர்த்தி நாயனார் பரவை நாச்சியாருக்காகப் பொன்பெற்றதையும், அவர் பசியால் வாடிய போது சிவபெருமான் முதியவர் வேடத்தில் வந்து பொதிசோறு அளித்ததையும் பாடுகிறார். அவிநாசி தலத்தில் முதலையால் விழுங்கப்பட்ட சிறுவனை சுந்தரர் பதிகம் பாடி மீட்ட மாபெரும் அற்புதத்தை நினைவு கூர்ந்து, அத்தகைய பெருமை வாய்ந்த திருப்புக்கொளியூர் சிவபெருமானால் போற்றப்படும் மாபெரும் தலைவனான முருகனைத் தொழுது வணங்குகிறார். இப்பாடலில், மதம் கொண்ட மதயானை கணபதி இந்திரலோகம் அவிநாசிப் பெருமான் ஆகியோரைக் குறிப்பிட்டு ஞானம் மற்றும் அவிநாசி பெருமாளின் அருளை வேண்டி முருகனின் சிறப்பைப் பாடும் பாடல் ஆகும். மதங்கொண்ட யானை, வாசனைப் பொருட்கள், வீணை இசை, ஆடம்பரம், மற்றும் மாதர்களின் மோகத்தில் மூழ்கி தவிக்காமல், சிவபெருமானின் குமாரனே! திருப்புக்கொளியூர் முருகனே! உனது திருவடியைச் சரணடைகிறேன் என அருணகிரிநாதர் பாடுகிறார்.

மதநீர் பெருகுவதற்கு இடமானதும், அகலமானது மானதாடையும், முன்புறத்தில் நுண்ணிய முக படமும், நெற்றிப்படமும், வாசனை பொருந்திய பச்சைக்கற்பூரம் கூடிய கலவையைக் கொண்ட நெற்றியும் உடைய, உணவினை வயிற்றில் இடுகின்ற வெகு அழகான தும்பிக்கையும், நன்கு சிவந்த கண்களும்,அதிவேகமாகச் செல்லும் நடையும், மணிகளின் சப்தம் மிகப் பலமாகக்கேட்கும்படிக் கட்டப்பட்ட (கழுத்துக்) கயிறும், இவை அனைத்தும் பொருந்தி யானை மீது ஏறிநிறைந்து செழிப்பு உற்ற கற்பகத்தருவின் நிழலில் அமைதியாகக் களைப்பாறியும், மலைக்கோட்டை போன்றனவும், நிலாமுற்றங்களை உடையனவுமாகிய அரண்மனைகளை உடைய பொன்னுலகத்தில் புகழ் பெற்ற தேவர்கள் சூழ்ந்து பணிய வாழ்கின்ற பிரபுத் தன்மைகொண்டு ஆட்சி செய்யும் இளைஞனாகிய உருவம் கொண்ட,என்னை ஆண்டருளிய, வயலூரில் வீற்றிருந்தருளும் செல்வனே!,என முருகப்பெருமானின் அழகைப் பாடுகிறார். மேலும், இன்பம் அடையுமாறு திருவாரூரில் இருந்த ஒப்பற்ற காதலி பரவை நாச்சியாருக்கு ஏற்றதான ஆயிரம் பொன்னைச் சம்பாதிக்க தலங்கள் தோறும் சென்று தரிசித்த அடியாராகிய சுந்தரர் இசைக்கு பொருந்தும் படி, உறுதியான முயற்சித் தெளிவுடன், உள்ளப் பெருக்கத்துடன் தேவாரப் பதிகம் பாடி வருகையில், கோடைக் கால வெப்பத்தால் அவருக்கு ஏற்பட்ட களைப்பு நீங்க, ஒரு மறையவர் கோலத்துடன், சுந்தரர் வந்து கொண்டிருந்த காட்டில் வந்து நிலையாகவே சுந்தரரின் எதிரே தோன்றி, பொதி சோறினை அவிழ்த்து தந்து பசி களைப்பு நீங்க உதவி செய்து அவிநாசி திருத்தலத்திற்கு வரும்போது, சுந்தரர் திசை தடுமாறிய சமயத்தில் அவருக்கு திசையை

காட்டி உதவி செய்து மறைந்து போனவரும், முன்பு ஏரியில் இருந்த முதலையின் வாயிலிருந்து பிள்ளையைச் (சுந்தரர் பாட்டுக்கு இரங்கி) வரச் செய்தார் என்ற குறிப்பினையும் மேற்கண்ட பாடல் மூலமும் குமரகுருபரன்இ.ஆ.ப., முனைவர் சசிக்குமார் அவர்கள் பதிப்பித்த அருணகிரிநாதர் திருப்புகழ் நூல் வழி அறியமுடிகிறது.

ஞானம்உற-

“வனப்புற்றெழு கேத மேவு கோகிலம்அழைக்கப் பொருமாரனேவ

தாமலர்மருத்துப்பயில் தேரி லேறி மாமதி .... ”

(திருப்புகழ் மூலமும் உரையும் ஆசிரியர் வா.சுசெங்கல்வராயன் பிள்ளை-உமாபதிப்பகம்- பாடல் எண்-952)

அருணகிரிநாதர் அருளிய "வனப்புற்றெழு கேத மேவு" எனத் தொடங்கும் இப்பாடல் முருகப்பெருமானின் சிறப்பையும், மன்மதனின் பாணங்களால் ஏற்படும் துன்பத்தையும், இறைவனின் அருளையும் விவரிக்கிறது. அழகு கொண்டு எழுகின்றதும், சோகத்தை விளைவிப்பதுமான குயில் கூவி அழைக்க, போரிடுவதற்கு வந்த மன்மதன் தென்றற் காற்றாகிய தேரில் ஏறிக் கொண்டு, தனது பாணங்களாகிய மலர் கொண்டு, காமபாணம் மலர் மாரி ஏவுதல்போன்றவற்றால் உண்டாகும் காம மயக்கத்திலிருந்து என்னை காத்து, உமது ஞானத்தை எப்போது நான் பெறுவேன்? என வேண்டுவதாக திருப்புகழ் மூலமும் உரையும் ஆசிரியர் வா.சு செங்கல்வராயன் பிள்ளை அவர்கள் கூறுகிறார்.

சந்திரனைப் போல முகம் உடைய பெண்கள், தங்களுடைய கண்கள் என்னும் அம்புகளை விடுத்து, தோள்கள் என்னும் அம்புகளைத் தொடுத்து, கணைக்கப்பணை தூவ, இத்தகைய மன்மத பாணங்களாலும், பெண்களின் காம மயக்கத்தாலும் ஏற்படும் துன்பத்தைத் தீர்த்தருள வேண்டும் என்றும், பெண்களின் வலைகளில் சிக்குண்டு நான் மாயக்கூடாது எனத் திருப்புக்கொளியூரில் வீற்றிருக்கும் தேவர்கள் தலைவன் முருகப்பெருமானிடம் வேண்டுகிறார்.

முடிவுரை

சமயச் சான்றோர்கள் ஒவ்வொருவரும் மாயநிலையில் இருந்து விடுபடுதல், ஞானம், முக்திநிலை(வீடுபேறு) போன்ற காரணங்களுக்காகத் தத்தமது சமயத்தில் பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்று பாடல்கள் பாடி வழிபாடு செய்தனர். அவ்வகையில் கௌமார சமயத்தில் முருகப்பெருமானின் அடியாரான அருணகிரிநாதர் எக்காலத்தும், எக்காரணத்தும் அழிவற்ற அரிய பொருளான அவிநாசிதிருத்தல முருகப்பெருமானை வேண்டி மாயை நீக்கி, ஞானம், வீடுபேறு நிலையினைப் பெறவேண்டி திருப்புகழ் பாடல்களைப் பாடி இந்த மானுடம்

தானும் பயன்பெற்று மக்களும் பயன்பெற பல பாடல்களைப் பாடி பக்தி நெறியினைச் சிறப்பித்துள்ளார் என்பதை, இந்த அவிநாசி திருப்புக்கொளியூர் திருத்தலத் திருப்புகழ் ஆறுபாடல்கள் மூலம் கண்டுணர முடிகிறது. இவ்வாறு மானுடர்கள் மாயநிலையில் இருந்து விடுபடுவதற்காகவும், ஞானம் பெறுவதற்காகவும், வீடுபேறு நிலையினை அடைவதற்காகவும் பாடிய அவிநாசி திருப்புக்கொளியூர் திருத்தலத் திருப்புகழ் காட்டும் பக்திநெறியின் சிறப்பினை இக்கட்டுரை மூலம் உய்த்துணரமுடிகிறது.

துணை நின்ற நூல்கள்:

1. மீனாட்சிசுந்தரம் நூல்கள்.த.ச.(உரை ஆசிரியர்) - அவிநாசித் தலபுராணம் -1955
2. சே சொ மீ சுந்தரம்-தித்திக்கும் திருப்புகழ் அமுதம்- உமா பதிகம் 2019
3. செங்கல்வராயன்பிள்ளை.வா.சு — திருப்புகழ் மூலமும் உரையும் - தொகுதி 4 உமா பதிப்பகம்: 2012
4. வெளியீட்டாளர் (ம) முதன்மைப் பதிப்பாசிரியர் குமரகுருபரன்இ.ஆ.ப, பதிப்பாசிரியர் சசிக்குமார்-அருணகிரிநாதர்-திருப்புகழ்— பாகம்5(இந்துசமய அறநிலையத்துறை வெளியீடு) -2022
5. செங்கல்வராயன்பிள்ளை.வா.சு முருகவேள் பன்னிரு திருமுறை : தொகுதி-2, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் : 1992

References

1. *Meenakshisundaram, T. S. Avinashi Thalapuranam.* 1955.
2. *, Prof. So. So. Meenakshi Sundaram, - Thithikkum Thiruppugazh Amutham. Uma Publications.* 2019
3. *Sengalvarayan Pillai, V. S. -Tiruppugazh: Text and Commentary. Uma Publications-*2012.
4. *Kumaragurubaran.j. IAS, Prof. Sasikumar.j.- Arunagirinathar- Thirupugazh- pagam-5, hindusamaya aranilayathurai :2022*
5. *Sengalvarayan Pillai, V. S -Murugavel Panniru Thirumurai : Volume-2, The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnelvely, Ltd. :* 1992

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com